# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.4/2022

DW1– சீதாலட்சுமி, நாள் 28.03.2025
க/பெ.தேவதாஸ்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி என் அப்பா. 2, 4 பிரதிவாதிகள் எனது சகோதரிகள். 1ம் வாதியின் கணவர் என் அண்ணன். 2003ல் எனக்கு திருமணமானது. திருமணமானதிலிருந்து நான் என் கணவர் வீட்டில் தான் வசிக்கிறேன் என்றால் 5வருடங்கள் கணவர் வீட்டில் இருந்தேன் அதன்பிறகு பெரம்பலூர் வந்துவிட்டேன். பெரம்பலூரில் என் அப்பாவுடன் சேர்ந்து வசிக்கவில்லை. என் அக்கா செல்லத்துக்கு 2000ல் திருமணமானது. என் அண்ணன் நடராஜமூர்த்தி 2018 ல் இறந்தார் என்றால் சரிதான். என் அண்ணன் உயிருடன் இருந்தபோது மனோகரன் என்பவருக்கு ஒரு சொத்தை 2005ல் விற்றோம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் நானும், என் சகோதரிகள், என் தகப்பனார், அண்ணன் ஆகியோர் கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். அந்த கிரையம் செய்த போது கிரைய தொகை பேசியதோ கிரைய தொகை பெற்றதோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பிறகு தான் என் சகோதரி சுபாராணிக்கு திருமணமானது. 1987–ல் எனக்கு 7வயது. இந்த வழக்கில் என் அப்பா தனியாக பதில்வழக்குரை போட்டுள்ளார். அவர் என்ன கட்சி செய்கிறார் என்று தெரிந்துகொள்ளவில்லை. வழக்கு போட்ட பிறகு என் அப்பாவை சந்தித்து வழக்கு சம்பந்தமாக பேசினேன். என் அப்பா தற்போது நிதானம்இல்லாமல் இருக்கிறார். என் அப்பாவுக்கு இப்போது வயது 88. என் அம்மா இறந்ததிலிருந்து என் அப்பா நிதானம் இல்லாமல் தான் இருக்கிறார். என் அம்மா 2012–2013ல் இறந்திருக்கலாம். என் அப்பா தனியாக தான் உள்ளார். தாவா 3வது அயிட்ட சொத்தில் மொத்தம் 4 வீடுகள் உள்ளது. அதில் மேல்தளத்தில் உள்ளஇரண்டு

வீடுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் உள்ள இரண்டு வீடுகளில் ஒரு வீட்டில் என் அப்பா இருக்கிறார் ஒரு வீட்டில் என்தங்கை இருக்கிறார்.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.